**பத்தாம் வகுப்பு தமிழ் & 20 ஆம் நூற்றாண்டு -103**

1. முத்தமிழின் முத்தாய்ப்பாய்த் திகழ்வது நாடகக்கலை, இயல், இசையால் காதுக்கு மட்டும்தான் இன்பம், கூத்தால் கண்ணுக்கும் இன்பம் என்று எடுத்துரைத்தவர் ?
[A] டி.கே.சண்முகம் [B] சங்கரதாஸ்
[C] பம்மல் சம்மந்தனார் [D]டி.கே.எஸ்.சகோதரர்

2. பதினொருவகைக் கூத்துக்களை மாதவி ஆடிய செய்தியை கூறுவது நூல் மற்றும் ஆசிரியரைத்தேர்க ?
[A] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்
[B] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்
[C] தொல்காப்பியம், இளங்கோவடிகள்
[D] அகத்தியம், அகத்தியர்

3. தமிழ் திரைப்படம் "இரத்தக் கண்ணீர்" எவ்வகை நாடகம்?
[A] குறவஞ்சி [B] வரலாற்றுநாடகம்
[C] நொண்டிநாடகம் [D] முக்கூடற்பள்ளு

4. பொருத்துக :
[A **The Secret Way** - இலக்குமணப்பிள்ளை
[B] **The Hernit** - சலசலோசனச் செட்டியார்
[C] சத்தியவதி - கோல்டுஸ்மித்
[D] சரசாங்கி - லிட்டன் பிரபு
[A] 2 1 4 3 [B] 4 2 3 1
[C] 3 1 2 4 [D] 4 3 1 2

5. ஷேக்ஸ்பியரின் நாடகங்களை தமிழாக்கம் செய்தவர் ?
[A] டி.கே.சண்முகம் [B] சங்கரதாஸ்
[C] பம்மல் சம்மந்தனார் [D]டி.கே.எஸ்.சகோதரர்

6. நாடக உலகில் பொருந்தாத ஒன்றைத் தேர்க :
[A] நாடக உலகின் இமயமலை - சங்கரதாசு
[B] தமிழ் நாடக தலைமையாசிரியர் - சம்மந்தனார்
[C] தமிழ் நாடக தந்தை - பம்மல் சம்மந்தனார்
[D] தமிழ் நாடக மறுமலர்ச்சி தந்தை - சண்முகனார்

7. பொருத்துக :
[A] மதங்க சூளாமணி (1) விபுலானந்தர்
[B] டம்பாச்சாரி விலாசம் (2) காசி விசுவநாதர்
[C] சாகுந்தலம் (3) மறைமலையடிகள்
[D] இராம நாடகம் (4) அருணாச்சலகவிராயர்
[A] 1 3 2 4 [B] 1 3 4 2
[C] 4 3 2 1 [D] 1 2 3 4

8. தேசிய உணர்வுகளைத் தூண்டும் நாடகத்தின் நடுவில் ஆங்கிலேயரையே அதிரவைத்த நையாண்டி நாடகம் (ம) பாடல்கள் "கொக்கு பறக்குதடி பாப்பா" - வை எழுதியவர்
[A] பாரதியார் [B] பரிதிமாற்கலைஞர்
[C] தெ.பொ.கிருஷ்ணசாமி [D] டி.கே.எஸ்.சகோதரர்

9. சமுதாய அவலங்களை கருப்பொருளாக கொண்டுநாடகம் படைத்த "கோமல் சுவாமிநாதன்" நாடகமல்லாதது ?
[A] தண்ணீர் தண்ணீர் [B] பெருமானே சாட்சி
[C] ஒரு இந்தியக் கணவு [D] அலையோசை

10. "என்று தணியும் இந்த சுதந்திரத் தாகம் ; என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்" - என்று பாடியவர் யார் ?
[A] பாரதியார் [B] பரிதிமாற்கலைஞர்
[C] தெ.பொ.கிருஷ்ணசாமி [D] டி.கே.எஸ்.சகோதரர்

11. எட்டயபுரத்து அரசவைக்கவிஞராக இருந்து ஜமீன்தாரர் அடிவருடியாக இருக்க பிடிக்காமல் வெளியேறிய போது பாரதியாரை ஆதரித்தவர்கள் யார் ?
[A] சுப்பிரமணிய சிவா, பாரதிதாசன்
[B] வ.உ.சிதம்பரம் பிள்ளை, பாலகங்காதர திலகர்
[C] முத்து இராமலிங்கத்தேவர், வ.உ.சிதம்பரம் பிள்ளை
[D] மகாத்மாகாந்தி, திரு.வி.கல்யாணசுந்தரம்

12. "எங்கெங்கு காணினும் சக்தியடா" - பாடியவர்
[A] பாரதியார் [B] பாரதிதாசன்
[C] கவிமணி [D] நாமக்கல் கவிஞர்

13. சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் எந்த ஆண்டு 'கவிமணி' என்ற பட்டத்தை "தேசிக விநாயகம்" பிள்ளைக்கு வழங்கியது ?
[A] 1876 [B] 1903
[C] 1954 [D] 1940

14. "நாமக்கல் கவிஞர்" வெ.இராமலிங்கம் பிள்ளையின் காப்பியப் படைப்பைத் தேர்க ?
[A] அவனும் அவளும் [B] சங்கொலி
[C] தமிழ்தேன் [D] தமிழ்மலர்

15. "கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது" உப்பு சத்யாக்கிரக வரிகள் எங்கு பாடப்பட்டது ?
[A] சபர்மதி ஆஸ்ரமம் [B] தண்டி
[C] கேரளா [D] வேதாரண்யம்

16. "உவமைக்கவிஞர்" - சுரதா உவமைகள் அல்லாதது ?
[A] தண்ணீரின் ஏப்பம்தான் அலைகள்
[B] வாழைத் தண்டுக்கா தடுக்கின்ற கணுக்கள் உண்டு
[C] ஆக்கிய அழகைகாண ஆயிரம் கண்கள் வேண்டும்
[D] சோகம் தராதவன் அசோகன்

17. எத்திராசு என்னும் அரங்கசாமி என்று அறியப்படும் வாணிதாசன் எந்த புனைப்பெயரில் அழைக்கப்பட்டார் ?
[A] கல்யான் ஜி [B] ரமி
[C] கலாப்ரியா [D] குசிகர்

18. பொருத்துக :
[A] கவிதாஞ்சலி - சுரதா
[B] பொங்கல் பரிசு - பெருஞ்சித்திரனார்
[C] சாவின் முத்தம் - வாணிதாசன்
[D] கனிச்சாறு - கண்ணதாசன்
[A] 2 1 4 3 [B] 4 1 2 3
[C] 3 1 2 4 [D] 4 3 1 2

19. கவிமணி பாடல்களில் எது / எவை சரி
I.பாட்டுக்கொரு புலவன் பாரதியடா
II.தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு - அங்கே
III.மங்கையராய்ப் பிறப்பதற்கே - நல்ல
IV.கம்பன் கவியுண்டு கலசம் நிறைய மதுவுண்டு
[A] I, சரி III தவறு [B] II,மற்றும் III சரி
[C] I, தவறு IV சரி [D] I,II,III, மற்றும் IV சரி

20. "புதினம் புளியமரம் என்றால் சிறுகதைதென்னைமரம்"
[A] ரா.பி.சேதுப்பிள்ளை [B] வ.வே.சு
[C] பாரதியார் [D] இராஜாஜி

21. "தமிழ் சிறுகதையின் திருமூலர்"
[A] இராஜாஜி [B] மு.வரதராசன்
[C] மௌனி [D] சுரதா

22. பொருத்துக :
[A] தேவானை (1) இராஜாஜி
[B] அன்பளிப்பு (2) பாரதியார்
[C] லைலா மஜ்னு (3) கு.அழகிரிசாமி
[D] பூலோக ரம்பை (4) வ.வே.சு.ஐயர்
[A] 1 3 2 4 [B] 1 3 4 2
[C] 3 4 1 2 [D] 1 2 3 4

23. "ஜேம்ஸ்ஹாட்லி சேஸ்" சுஜாதா இயற்பெயர் என்ன ?
[A] வேதாச்சலம் [B] விருத்தாச்சலம்
[C] ரங்கராஜன் [D] ராஜகோபால்

24. அகிலன் நூல்களில் சாகித்யஅகாதெமி பரிசு பெற்றது
[A] வேங்கையின் மைந்தன் [B] எங்கே போகிறோம்
[C] சித்திரப் பாவை [D] நெஞ்சின்அலைகள்

25. கீழ்கண்டவற்றுள் பொருத்தமற்றது :
[A] கரித்துண்டு - அறிஞர் அண்ணா
[B] பொன்விலங்கு - நா.பார்த்தசாரதி
[C] மணல் வீடு - அநுத்தம்மா
[D] நிழல் முற்றம் - பெருமாள் முருகன்

ARIVU TRUST

**26.** "சூர்ப்பனகை"- நாடகத்தைப் படைத்தவர் ________
[A] சங்கரதாசு [B] சுந்தரம்பிள்ளை
[C] பரிதிமாற்கலைஞர் [D] சம்மந்தனார்

**27.** கவிஞர் கண்ணதாசன் வாழ்வின் இறுதியில் எழுதிய நூல் எதுவெனத்தேர்க ?
[A] பாரிமலைக்கொடி [B] சிவகங்கைச்சீமை
[C] அனார்கலி [D] இயேசுகாவியம்

**28.** பாமர மக்களின் பல்கலைக்கழகம் "நாடகத்தமிழ்" புகழ்ந்தவர் ________
[A] சங்கரதாசு [B] சம்மந்தம்
[C] பரிதிமாற்கலைஞர் [D] T.K சண்முகம்

**29.** "சேவா ஸ்டேஜ்" குழுவை ஏற்படுத்தியவர்
[A] சங்கரதாசு [B] T.K.Sசகோதரர்கள்
[C] பம்மல் சம்மந்தம் [D] சகஸ்ரநாமம்

**30.** கீழ் கொடுக்கப்பட்ட நூல் நூலாசிரியர் தவறானது
[A] காமஞ்சரி - இராஜாஜி
[B] திருக்குறளும் பரிமேலழகரும் - புலவர் குழந்தை
[C] பட்டத்தரசி - சுரதா
[D] குழந்தை இலக்கியம் - வாணிதாசன்

**31.** தமிழ்நாட்டின் 'ஷெல்லிதாசன்'
[A] பாரதியார் [B] பாரதிதாசன்
[C] அண்ணா [D] வாணிதாசன்

**32.** "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்குங் காணோம்" தமிழை உலகறியச் செய்தவர்
[A] பாரதியார் [B] பாரதிதாசன்
[C] கம்பர் [D] பாவாணர்

**33.** ஆன்மீகவிடுதலை,பெண்விடுதலை,சமுதாயவிடுதலை நாட்டு விடுதலையை விழைந்த விடுதலைக் கவிஞர்
[A] இராமலிங்கம் [B] தேவர்
[C] முடியரசன் [D] பாரதிதாசன்

**34.** வே.இராமலிங்கம் பற்றி பொருந்தாத ஒன்று :
[A] முத்தமிழிலும், ஓவியக்கலையிலும் வல்லவர்
[B] காந்தியக் கவிஞர் என்று போற்றப்படுகிறார்
[C] சிறந்த திரைத்துறை பாடல்கள் எழுதியுள்ளார்
[D] உப்பு சத்தியாகிரகத்தில் பங்கு கொண்டார்

**35.** பிரஞ்சுக் குடியரசுத் தலைவரால் செவாலியர் விருது பெற்ற தமிழ் புலவர் யார் ?
[A] சுப்புரத்தின தாசன் [B] பாரதிதாசன்
[C] வாணிதாசன் [D] பாரதியார்

**36.** தமிழகத்தின் 'வேர்ட்ஸ் வொர்த்'
[A] வாணிதாசன் [B] சுஜாதா
[C] கம்பதாசன் [D] அநுத்தம்மா

**37.** சுரதா இயற்றிய நூல்களில் தமிழ் வளர்ச்சி துறை பரிசு பெற்ற நூலைத் தேர்க :
[A] துறைமுகம் [B] தேன்மழை
[C] சுவரும் சுண்ணாம்பும் [D] சுரதா கவிதைகள்

**38.** இவற்றில் எது அறிஞர் அண்ணா கூற்று ?
[I] பாட்டாளி ஓய்வு பெறுவது சமூக நீதியில் ஒன்று
[II] மெய்வைத்த செல்வமெங்கே மண்டலீகர்தம்மேடை
[III] உள்ளத்தே பொருள் இருக்க புறம்பே பொருள்தேட
[IV] மன்னருக்குத் தன் தேசமில்லாமல் இறப்பில்லை
[A] III மட்டும் [B] I, III மட்டும்
[C] III ,IV மட்டும் [D] I மட்டும்

**39.** "தேசிக விநாயகத்தின் கவிப்பெருமை தினமும் கேட்பது என் செவிப்பெருமை"- புகழ்ந்து கூறியவர்
[A] பாரதியார் [B] பாரதிதாசன்
[C] நாமக்கல் கவிஞர் [D] வள்ளலார்

**40.** "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்" - யாருடைய வரிகள்
[A] மறைமலையடிகள் [B] ஆறுமுகநாவலர்
[C] சூரியநாராயண சாஸ்திரி [D] பாரதியார்

**41.** கீழ்கண்டவற்றுள் பொருத்தமற்றது :
[A] பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் - வள்ளுவம்
[B] பிறன்மனை நோக்காப் பேராண்மை - புறநானூறு
[C] யான் பெற்ற இன்பம் பெறுக - திருமந்திரம்
[D] செம்புலப் பெயல்நீர்போல - குறுந்தொகை

**42.** "உலகம் முழுவதும் அழிந்துவிட்டாலும் இந்த இரு நூல்கள் இருந்தால் மீண்டும் புதுப்பித்து விடலாம்" என்று கால்டுவெல் கூறிய இரு நூல்கள்
[A] நாலடியார், திருக்குறளும்
[B] திருக்குறள், கம்பராமாயணம்
[C] கம்பராமாயணம், மகாபாரதம்
[D] சிலப்பதிகாரம், மணிமேகலை

***43.*** Court fee stamp- என்பது
[A] நீதிமன்ற முத்திரைக் கட்டணம்
[B] நீதிமன்ற பிணையக் கட்டணம்
[C] நீதிமன்ற கட்டண வில்லை
[D] நீதிமன்ற அபராத கட்டணம்

**44.** கீழ்கண்டவற்றுள் பொருத்தமற்றது :
I.பார்த்துப்போ கவனமாப்படி - கட்டளைவாக்கியம்
II.என்னே ! இமயமலையின் உயரம் - துன்பம்
III.அழகன் பாடம் எழுதுகிறான் - தனிநிலைத்தொடர்
IV.எங்கே செல்கிறாய் - வினாவாக்கியம்
[A] I [B] II [C] III [D] IV

**45.** "வித்தொடு சென்ற வட்டி பற்பல மீனொடு பெயரும் யாணர் <u>ஊர</u>" - இலக்கணம் தருக
[A] பெயரெச்சம் [B] வினையெச்சம்
[C] விளித்தொடர் [D] முதல்வேற்றுமை

**46.** "இது செய்வாயா" ? என்று வினவியபோது 'உடம்பு நொந்தது' என்று விடையாகக் கூறுவது ________
[A] வினாஎதிர்வினாதல் விடை
[B] உற்றதுரைத்தல் விடை
[C] உறுவது கூறுதல் விடை
[D] இனமொழி விடை

**47.** இளங்கோவின் குடும்பத்தினர் வாழையடி வாழையாக வேளாண்மைத் தொழில் செய்து வருகின்றனர்
[A] பரம்பரை பரம்பரையாக [B] தினம் தினம்
[C] நாள்தோறும் [D] அனைத்தும்

**48.** <u>தீராக் காதலனாகும்</u> என்று கருணையின் மலர்ந்த கண்ணன் அடிக்கோடிட்டதற்கு இலக்கணம் தருக
[A] பண்புப்பெயர் [B] பண்புத்தொகை
[C] ஈறுகெட்டஎதிர்மறை பெயரெச்சம் [D]வினையெச்சம்

**49.** "நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும் காலின் வந்த கருங்கறி மூடையும்" <u>கருங்கறி</u> என்பது
[A] புற்கரி [B] அடுப்புகரி
[C] முத்து [D] மிளகு

**50.** தழீஇய (தழுவிய) இலக்கணம் தருக
[A] வியங்கோள்வினைமுற்று
[B] சொல்லிசை அளபெடை
[C] இன்னிசை அளபெடை
[D] ஒற்றளபெடை

**51.** சந்திப்பிழையற்ற தொடர் எது ?
[A] கயிறுகட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்
[B] கயிற்றுக்கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்
[C] கயிற்றுகட்டிலில் தன்னை மறந்து உறங்கினன்
[D] கயறுகட்டிலில் தன்னை மறந்து உறங்கினன்

**52.** பொருத்தமற்றதைத் தேர்க :
[A] அடி அகரம் ஐ ஆதல் - பைங்கூழ்
[B] ஆதிநீடல் - மூதூர்
[C] இனமிகல் - கரும்பலகை
[D] தன்னொற்றிரட்டல் - மேனாடு

ARIVU TRUST

53. திருவாசகத்தில் உள்ள பாடல்கள் எண்ணிக்கை
[A] 44 [B] 430 [C] 458 [D] 658

54. சங்க இலக்கியங்கள் மொத்த அடிகள் (26,350) என்று ஆய்ந்து கூறிய செக் நாட்டு மொழியியல் அறிஞர்
[A] மாக்சுமுல்லர் [B] கெல்லட்
[C] கமில்சுவலபில் [D] கால்டுவெல்

55. சூரியநாராயண சாஸ்திரி - தம் இல்லத்தில் தமிழ் பயின்ற மாணவர்களை எவ்வாறு அழைத்தார்
[A] நற்றமிழ் மாணவர்
[B] இசைத்தமிழ் மாணவர்
[C] இயற்றமிழ் மாணவர்
[D] கொடுந்தமிழ் மாணவர்

56. "சமுதாயத்தின் வேரை சாதிப்புழுக்கள்அரித்துவிடாமல் தடுத்த நச்சுக்கொல்லி மருந்து" ____________
[A] அம்பேத்கர் [B] பெரியார்
[C] காந்தி [D] மங்கம்மாள்

57. "அருத்தியன், தேனும் மீனும் அமுதினுக்கு"
[A] உம்மைத்தொகை [B] உவமைத்தொகை
[C] எண்ணும்மை [D] பொருட்பெயர்

58. 'புக்கான்'- பகுபத உறுப்பிலக்கணம் காண்க
[A] புகு + க் + அன்
[B] புகு + ஆண்
[C] புகு (புக்கு) + ஆண்
[D] புகு (புக்கு) + அன்

59. "உடம்பிடை தோன்றிற் றொன்றை அறுத்ததன் உதிரம் ஊற்றி" என்று அறுவை மருத்துவம் பற்றி கூறியவர்
[A] கம்பர் [B] மாணிக்கவாசகர்
[C] புத்ததுரவியர் [D] திருவள்ளுவர்

60. மாணிக்கவாசகர் எழுப்பிய கோயில் உள்ள இடம் மற்றும் மாவட்டம் எதுவெனத் தேர்க
[A] திருவாதவூர் - மதுரை
[B] திருவாதவூர் - புதுக்கோட்டை
[C] திருப்பெருந்துறை - புதுக்கோட்டை
[D] திருப்பெருந்துறை - மதுரை

61. உலக வரலாற்றில் புலமை, உழைப்பு, துன்பம், பக்தி நம் மனத்தை கவர்ந்தவர் யாரென ஜி.யு.போப் கூறுகிறார்
[A] மாணிக்கவாசகர் [B] திருவள்ளுவர்
[C] திருநாவுக்கரசர் [D] அப்பூதியடிகள்

62. தேசம் என்பது மொழியை அடிப்படையாகக் கொண்டு இயங்குகிறது என்று கூறிய "பகுத்தறிவுப் பகலவன்"
[A] காந்தியடிகள் [B] பரிதிமாற்கலைஞர்
[C] பெரியார் [D] தேவநேயபாவாணர்

63. வாயிற் கடைமணி நடுநா நடுங்க ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுடர் தான்தன் அரும்பெறல் __________ ஆழியின் மடித்தோன்
[A] கணவனை [B] ஊழ்வினை
[C] புதல்வனை [D] சிறப்பினை

64. தமிழ் பதினாறு செவ்வியல் தன்மை கொண்டது "செம்மொழி ; அதுவே நம்மொழி" என்று கூறியவர்
[A] பரிதிமாற்கலைஞர் [B] பெருஞ்சித்திரனார்
[C] தேவநேயப்பாவாணர் [D] திரு.வி.க

65. கீழ்கண்டவற்றுள் பொருத்தமற்றது (சிலப்பதிகாரம்)
I.தென்னம்பொருப்பு - தெற்கே உள்ள பொதியமலை
II.சூருடை கானகம் - அச்சம் தரும் காடு
III.கடைமணி - அரண்மனை வாயில் மணி
IV.அறுவர்க்கு இளையவள் - துர்க்கை
[A] I [B] II [C] III [D] IV

66. கண்ணகி அணிமணிக் காற்சிலம் புடைப்ப மன்னவன் வாய்முதல் தெறித்த மணி ____________
[A] மாணிக்கம் [B] முத்து
[C] கோமேதகம் [D] மரகதம்

67. பொருத்துக :
[A] மடக்கொடி (1) வினைத்தொகை
[B] தேராமன்னா (2) வியங்கோள்வினைமுற்று
[C] செய்கொல்லன் (3) அன்மொழித்தொகை
[D] கெடுக (4) ஈறுகெட்ட எதிர்மறை
[A] 1 3 2 4 [B] 3 1 4 2
[C] 3 4 1 2 [D] 1 2 3 4

68. பொருத்துக :
[A] Aesthetic - பாசறை
[B] Instinct - இயற்கை வனப்பு
[C] Order of Nature - இயற்கை அறிவு
[D] Green Rooms - இயற்கை ஒழுங்கு
[A] 2 1 4 3 [B] 3 1 2 4
[C] 2 1 3 4 [D] 2 3 4 1

69. "மண்டைச் சுரப்பை உலகு தொழும் மனக்குகையில் சிறுத்தை எழும்" "மனக்குகை" என்பது
[A] சினைப்பெயர் [B] உவமைத்தொகை
[C] உருவகம் [D] உம்மைத்தொகை

70. கீழ்கண்டவற்றுள் சரியானது (புறநானூறு)
[A] அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்
[B] யாதும் ஊரே யாவரும் கேளிர்
[C] செம்புலப் பெயல் நீர்போல அன்புள்ளம் கொண்டனர்
[D] ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்

71. "என்னுடைய உருவச்சிலையை நான் இங்கு வைத்தால் எதிர்காலத்தில் என் பெயர் மறைந்துவிடும்"
[A] மாவீரன் நெப்போலியன்
[B] மாவீரன் அலெக்சாண்டர்
[C] அண்ணல் அம்பேத்கர்
[D] அண்ணல் காந்தியடிகள்

72. "நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ணமுடியாது" எந்த மாவட்ட பேச்சு வழக்கு
[A] கண்ணியாகுமரி [B] திருநெல்வேலி
[C] மதுரை [D] கோயம்புத்தூர்

73. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க
[A] வட்டம், யானை, மனம், பட்டம்
[B] யானை, மனம், வட்டம், பட்டம்
[C] மனம், பட்டம், வட்டம், யானை
[D] பட்டம், மனம், யானை, வட்டம்

74. வண்டர் - என்பதற்கு சரியான இலக்கணம் தருக
[A] இலக்கணப்போலி [B] முதற்போலி
[C] கடைப்போலி [D] தொழிற்பெயர்

75. கீழ்கண்டவற்றுள் பொருந்தா இணையைத் தேர்வு செய்க
[A] மென்கண் - பண்புத்தொகை
[B] செய்வினை - இரண்டாம் வேற்றுமைத்தொகை
[C] ஊர (ஊரனே) - விளித்தொடர்
[D] சென்ற வட்டி - பெயரெச்சம்

76. "பண்ணவன்" என்று அழைக்கப்படுபவன் யார் ?
[A] நற்குணங்கள் பல உடைய இலக்குவன்
[B] நற்குணங்கள் பல உடைய தசரதன்
[C] நற்குணங்கள் பல உடைய இராமன்
[D] நற்குணங்கள் பல உடைய குகன்

77. சிந்தனை உணர்கிற்பான் சென்றனன் விரைவோடும் தந்தனன் நெடுநாவாய் "தாமரை நயனத்தான்"
[A] சீதை [B] கண்ணகி
[C] குகன் [D] இராமன்

78. ஒருபொருட் பன்மொழிக்கு சான்று ____________
[A] உயர்ந்தோங்கி
[B] குழிந்தாழ்ந்து
[C] மீமிசைஞாயிறு
[D] அனைத்தும்

**79.** ஆடத்தெரியுமா என்னும் வினாவிற்குப் பாடத்தெரியும் எனக் கூறுவது ______________
[A] இனமொழிவிடை [B] உறுவதுகூறல்விடை
[C] சுட்டுவிடை [D] நேர்விடை

**80.** பின்வரும் உவமைத்தொடரில் பொருத்தமற்றது
[A] அனலிடைப்பட்ட புழுவைப்போல - துடித்தல்
[B] அடியற்ற மரம்போல - சாய்தல்
[C] மழைக்காணாப் பயிர்போல - வாட்டம்
[D] உள்ளங்கை நெல்லிக்கனி போல - தெளிவு

**81.** "சூலை" என்னும் பெருநோயால் சைவசமயம் வந்தவர்
[A] காளமேகப்புலவர் [B] கூன்பாண்டியன்
[C] மகேந்திரவர்மன் [D] திருநாவுக்கரசர்

**82.** கீழ்கண்ட இலக்கணத்தில் பொருந்தாதது
[A] தாய்தந்தை - உவமைத்தொகை
[B] மல்லலம் குருத்து - உரிச்சொற்றொடர்
[C] இன்னமுதம் - பண்புத்தொகை
[D] துளங்குதல் - தொழிற்பெயர்

**83.** உலகம், உயிர், கடவுள், ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியந்தான் "பெரியபுராணம்" கூறியவர்
[A] திரு.வி.க [B] சேக்கிழார்
[C] மீனாட்சிசுந்தரம் [D] அப்பூதியடிகள்

**84.** பிரித்தெழுதுக :
[A] நாற்கரணம் = நான்கு + கரணம்
[B] கரணத்தேர் = கரணம் + ஏர்
[C] செவியறுத்து = செவி + அறுத்து
[D] விண்ணபமுண்டு = விண்ணப்பம் + உண்டு

**85.** கீழ்கண்டவற்றுள் சரியானதைத் தேர்ந்தெடு
[I] பண்ணொடு தமிழொப்பாய் - தேவாரம்
[II] நரம்பின் மறை - தொல்காப்பியம்
[III] தமிழ்கெழு கூடல் - புறநானூறு
[IV] குழலினிது யாழினிது - திருக்குறள்
[A] I, II, III, IV தவறு [B] I, II, III, IV சரி
[C] I, சரி II, தவறு III, IV சரி [D] I, சரி II, III, IV தவறு

**86.** செய்யுளில் ஒரே பொருள் தரும் (மலர்தல் என்னும் சொல், அவிழ்தல், அலர்தல், நெகிழ்தல், விள்ளல், விரிதல்) என்னும் பல பொருட்கள் வந்துள்ள அணி ?
[A] சொல் பின்வரு நிலையணி
[B] பொருள் பின்வரு நிலையணி
[C] பின்வரு நிலையணி
[D] இரட்டுற மொழிதல் அணி

**87.** ஒரு செய்யுளில் ஒரு சொல் பிரிவுபடாமல் நின்று, ஒன்றுக்கு மேற்பட்ட பொருளைத் தருவது ______________
[A] பிரிமொழிச்சிலேடை
[B] செம்மொழிச்சிலேடை
[C] வஞ்சப்புகழ்ச்சி அணி
[D] தற்குறிப்பேற்ற அணி

**88.** நூலப் பயன்பாட்டிற்கான விதிகளை உருவாக்கித் தந்த சீர்காழி சீ.இரா.அரங்கநாதன் எவ்வாறு போற்றப்படுகிறார்
[A] முதன் முதலில் நூலகத்தை அமைத்தவர்
[B] நூலக விதிகளை சட்டமாக்க உயிர் நீத்தவர்
[C] தமிழக நூலகத் தந்தை
[D] இந்திய நூலகத் தந்தை

**89.** ஒரு மனிதன் ஆண்டுக்கு எத்தனை பக்கங்களை படிக்க வேண்டும் என்று யுனஸ்கோ கூறுகிறது ?
[A] 200 பக்கங்கள் [B] 2000 பக்கங்கள்
[C] 20000 பக்கங்கள் [D] 200000 பக்கங்கள்

**90.** "உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்" - தோன்றக் காரனாமனவர் சாலை.இளந்திரையன் தமிழக அரசின் பாவேந்தர் விருது எந்த ஆண்டு வழங்கப்பட்டது ?
[A] 1990 [B] 1991
[C] 1992 [D] 1993

**91.** கீழ்கண்ட ஒலி மரபில் தவறானதைத் தேர்ந்தெடு ?
[A] குதிரை கனைக்க எருது எக்காளமிட கிளி பேசியது
[B] யானை பிளிற பூனை சீற கோழி கூவியது
[C] வண்டு முரல குயில் கூவ ஆந்தை அலறியது
[D] எலி கீச்சிட பூனை சீற குரங்கு அளப்ப ஆடு கத்தியது

**92.** "உங்களுடைய தருமமும், கருமமுமே உங்களைக் காக்கும்" என்று முத்தாய்ப்பாய் கூறியவர் ?
[A] மங்கம்மாள் [B] திருவள்ளுவர்
[C] காத்தவராயன் [D] மகாத்மாகாந்தி

**93.** "சங்கடம் விளைவிக்கும் சாதியையும் மதத்தையும் தவிர்த்தேன்" என்று இகழ்ந்தவர் யார் ?
[A] மகாத்மாகாந்தி [B] அயோத்திதாசர்
[C] இராமலிங்கர் [D] திகம்பரர்

**94.** "உத்தம மனிதர், புரட்சி துறவி" என்று அனைவராலும் பாராட்டப்பட்டவர் யார் ?
[A] விவேகானந்தர் [B] இளங்கோவடிகள்
[C] திருமூலர் [D] திலகர்

**95.** "மீன்நோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட் டம்மா" இவ்வரியில் 'மீன்நோக்கும்' சொல்லுக்கு பொருள் தருக
[A] மீன்கள் பார்க்கும் [B] மீன்கள் கேட்கும்
[C] மீன்கள் வாழும் [D] மீன்கள் சிரிக்கும்

**96.** பின்வருவனவற்றுள் எது வினைத்தொகை அல்ல ?
[A] பொழிதருமணி [B] பனைதருபருமணி
[C] நிதிதருகவிகை [D] இவையெல்லாம்

**97.** தனியொருவனுக் குணவிலை யெனில் ______________ ?
[A] ஊரினை அழித்திடுவோம் !
[B] உலகத்தினை அழித்திடுவோம் !
[C] நகரத்தை அழித்திடுவோம் !
[D] சகத்தினை அழித்திடுவோம் !

**98.** "தொல்காப்பியச் செம்மல்" ______________
[A] நா.காமராசான் [B] நா.கருணாநிதி
[C] தொல்காப்பியன் [D] புலவர் தமிழன்பன்

**99.** வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே, உலகின் முதல் மாந்தரினம் வாழ்ந்த பகுதி "கூடியம்" என்று வரலாற்று அறிஞர்களால் கண்டறியப்பட்ட பகுதி எந்த மாவட்டத்தில் உள்ளது ?
[A] லெமூரியா [B] குமரிக்கண்டம்
[C] திருவள்ளூர் [D] காஞ்சிபுரம்



கிராமியச்சந்தம், புதுப்பார்வை திகழப் படிம கவிதைகள் பலவற்றை தந்த, உருவக அணியை உத்தியாகக்கொண்ட உருவகக் கவிஞர் "கருப்பு மலர்" (ரை) கொடையாக வழங்கிய 'கவியரசர்' நா.காமராசன் அவர்களின் ஆத்மா சாந்தி அடைய அறிவு அறக்கட்டளை சார்பாக ஆழ்ந்த இரங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்

**100.** "கணையாழி" தந்த நா.காமராசன் பிறந்த ஊரைத்தேர்க ?
[A] தேனி [B] போடி நாயக்கனூர்
[C] மீனாட்சி புரம் [D] உடுமலைப்பேட்டை

Coming soon – vao

ARIVU TRUST

# ANSWER KEY 10 - TAMIL

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 D | 2 B | 3 C | 4 D | 5 C | 6 B | 7 D | 8 C | 9 D | 10 A | 51 B | 52 D | 53 D | 54 A | 55 C | 56 A | 57 C | 58 C | 59 A | 60 C |
| 11 B | 12 B | 13 D | 14 A | 15 D | 16 C | 17 B | 18 D | 19 D | 20 D | 61 A | 62 C | 63 C | 64 C | 65 D | 66 A | 67 C | 68 D | 69 C | 70 B |
| 21 C | 22 B | 23 C | 24 A | 25 A | 26 C | 27 D | 28 D | 29 D | 30 A | 71 B | 72 B | 73 D | 74 C | 75 B | 76 A | 77 D | 78 D | 79 A | 80 B |
| 31 A | 32 A | 33 A | 34 C | 35 C | 36 A | 37 B | 38 D | 39 C | 40 D | 81 D | 82 A | 83 A | 84 B | 85 B | 86 B | 87 B | 88 D | 89 B | 90 B |
| 41 B | 42 B | 43 C | 44 B | 45 C | 46 B | 47 A | 48 C | 49 D | 50 B | 91 B | 92 C | 93 C | 94 C | 95 C | 96 D | 97 D | 98 D | 99 C | 100 C |

ARIVU TRUST